அமுது

53

0—1x
N53
120603

பதிப்பாசிரியர் :- எம்.கே.தாயப்பன்

உயர்ந்த நயம் காப்பிக்கொட்டையை

எலக்டிரிக் மிஷினுல்

கைபடாமல் பக்குவமாய்

வறுத்த நறுமணம் கமழும்

காப்பி பவுடரும்,

பிரசித்தி பெற்ற

கண்ணன்தேவன்

தேயிலையும்

1, 1/2, 1/4 பவுண்டு

பாக்கெட்டுகளாக

★

எங்களிடம் விலை

சகாயமாய்க் கிடைக்கும்.

உங்கள் தேவைக்கு எங்களிடம்

ஒருமுறை வாங்கி உபயோகித்துப்

பாருங்கள்,

தேவி காபி ஒர்க்ஸ்

அருப்புக்கோட்டை.

உரிமையாளர்கள்: { T. S. S. சுப்பையா.
P. வீரையா.

"அமுது"

ஆசிரியர்கள்:

வி. நரசிம்மன்
ஜே. பி. ஞானஒளிவு

★

வெளியீடு:
சாந்தா நிலையம்
திருத்தங்கல்.
(வழி) சிவகாசி.

வெளியீடு 4.

முதற் பதிப்பு ஜுலை 1953

உரிமை ஆசிரியருக்கே.

★

பதிப்பாசிரியர்

எம். கே. தாயப்பன்

★

விலை

0-8-0

ஆனந்தா அச்சகம்,
விருதுநகர்.-'53.

வாசக நேயர்களுக்கு

பள்ளி மாணவ — மாணவிகளுக்குப் பயன் தரும் நூல் ஒன்று வெளியிட எண்ணினோம். எங்கள் எண்ணத்திற்கு ஆதரவு அளிக்கும் நிலையில் "அமுது"வை அளித்தனர் ஆசிரிய நண்பர்கள்.

"அமுதை" அளித்த திரு. வி. நரசிம்மன், திரு. ஜே. பீ. ஞானஒளிவு இருவருக்கும் நன்றி செலுத்துவதுடன், இதனை அச்சிட்டுத் தந்த ஆனந்தா அச்சகத்தாருக்கும் எங்கள் நெஞ்சுகந்த நன்றி!

பள்ளிக்குப் பயன் தரும் நல் நூல்கள் பல விரைவில் வெளி வருமென பூரிப்புடன் கூற ஆசைப்படுகிறோம்.

வணக்கம்.

பதிப்பகத்தார்.

ஒரு வார்த்தை ...!

"அமுது" எங்களது முதல் முயற்சியிலே உருவான கவிதைத் தொகுதி. கல்வி அதிகாரி களின் வேண்டுகோளுக் கிணங்க புதிய மெட்டு களில் – ஆதாரக் கல்வியின் திட்டத்தை ஒட்டி புதிய முறையில் அமைத்துள்ளோம்; முயற்சி யில் எவ்வளவு தூரம் வெற்றிபெற்றிருக்கிறோம் என்பதை உங்கள் தீர்ப்புக்கு விட்டுவிடுவதுடன் நல்லதொரு நூலாக்கி உங்கள் முன் சமர்ப் பிக்கும் சாந்தா நிலையத்தவர்களுக்கு எங்கள் நன்றி. வணக்கம்.

தங்கள்

வி. நரசிம்மன்

ஜே. பி. ஞானஒளிவு

தாயில்பட்டி,
1—7—'53.

விரைவில் வெளிவருகிறது!

எங்கிருந்தோ வந்த நாடோடி!

மண்ணாசைகொண்டு — மக்களைக் கொலைக்

களத்திலே நிறுத்துகிறான்.

பாலிலே கலந்த துளி விஷம் — அம்பி!

நாட்டிற்காகத் தன் வாழ்வைக்

கொலைக் களத்திலே நிறுத்துகிறான்

உத்தமன் ஒருவன்!

சரித்திர நிகழ்ச்சி! உலகறிந்த உண்மைச் சம்பவம்!

தீந்தமிழிலே தித்திக்கும் வகையில் வெளிவருகிறது

"லட்சிய வீரன்"

(நாடகம்)

ஆசிரியர்: வி. நரசிம்மன்.

★

குறிப்பு: பள்ளி மாணவர்கள் நடிப்பதற்கு சிறந்த நாடகம்.

மதிப்புரை.

இந்நூல் பற்றி

திரு. ரா. கிருஸ்ணசாமி எம். எல். ஏ., அவர்கள்

கூறுவது:

மாணவ, மாணவிகள் பயன்படுவதற்கேற்ற முறையில் எளிய மெட்டுக்களில் பாட்டுக்கள் அமைத்துப் புத்தக ரூபமாக வெளியிட வேண்டுமென்ற ஆர்வ மிகுதியால் ஆரம்ப பள்ளி ஆசிரியர் இருவர் சேர்ந்து ஆக்கியதே "அமுது" என்னும் இந்நூல்.

கடவுள் பக்தி, நாட்டு வணக்கம், மகான்களின் சரித்திரம், சிறு கதைகள், ஒழுங்கு, ஒழுக்கம் ஆகிய நற் பண்புகள் சிறு பிராயமுதலே பள்ளிச் சிறுவர்களிடம் உருவாவதற்கும், அவை சாதாரண பாடல்களின் மூலம் அவர்களுக்கு எளிதில் மனப்பாடமாகி நினைவிலிருத்திக் கொள்வதற்கும் இப் பாடல்கள் உபயோகமாய் இருக்கும் என்று நம்பலாம்.

சிறுவர், சிறுமியர்க்காக இயற்றும் வர்ண மெட்டுப் பாடல்களில் இலக்கண எதுகை—மோனை, நீட்டல்—குறுக்கல் ஆகிய வழுக்கள் இருப்பது சகஜமே. அவற்றை குறைகளாக மேலோர் கருதுவதில்லை.

எனவே, கிராம ஆரம்ப பள்ளி ஆசிரியர் இருவர் முயன்று உருவாக்கிய இந்நூலை அனைவரும் ஆதரிப்பார்கள் என்பது எனது துணிபு. இம் முயற்சியில் துணிந்த ஆசிரியர்கள் இருவருக்கும் எனது பாராட்டுகள் உரியன.

இங்ஙனம்

ஸ்ரீவில்லிபுத்தூர்,
10—7—'53.

ரா. கிருஸ்ணசாமி M. L. A.

இறைவன் துதி.

பாட்டு 1.

(சம்சாரம், சம்சாரம் — என்ற மெட்டு.)

தொழுவோமே தொழுவோமே
குழுவாக ஒன்றாய்க் கூடி கைகூப்பி காலை மாலை
(தொழு)

1. பல்கலைகள் வளர — நம்
அல்லல் வாழ்வில் நீங்க
இன்முகத்தோடு நிலையான அன்பினாலே (தொழு)

2. சுத்த இதயத்தாலே — நாம்
நித்தம் வணங்க வேண்டும்
நிலையான அன்பு வேண்டும்
குலையாத பக்தி வேண்டும் (தொழு)

3. சுகவாழ்வு வந்த போதும் — மிக
துன்பம் நேரிட்டாலும்
நேர்மையாகத் தினமும் — அவர்
பாதம் போற்ற வேண்டும். (தொழு)

பாட்டு 2.

(வாழ்வின் ஜீவன் காதலே — என்ற மெட்டு.)

வாழ்வில் தேவன் நாமத்தை
வளமே காணத் துதிப்போமே புவிமீதிலே (வாழ்)

1. சூழும் துன்பம் போகுமே — உயர்
இன்பம் வாழ்வில் சேருமே
ஆனந்த வாழ்வு அடைந்திட லாமே
ஆண்டவன் அருளாலே (வாழ்)

2. கண்ணிமை போலே காத்திடுவாரே
கஷ்டத்தை நீக்கி நலன் தருவார்
விண்ணும் மண்ணும் யாவும் படைத்த
அதிசய ரூபனவர் (வாழ்வில்)

3. சேயைப் பிரிந்திராக் கன்றினைப்போல்—தினம்
சேவை செய்தே அவர் அணைத்திடுவார்
யாவரும் கூடி அன்பினால் நாடி
வாழ்த்திடுவோம் தினமே — (வாழ்வில்)

பாட்டு 3.

(பிரேமைப் பாசத்தால் — என்ற மெட்டு.)

பிரேமை அற்புத உலகைப் படைத்தாய்
அழியா வரம் பெற்றாய் - தேவா
அழியா வரம் பெற்றாய் — (பிரேமை)

1. ஹேபகவான் கதிவேறில்லையே - எம்மை
பாவத்தினின்று காத்திடுவீர்
ஓதும் வேதம் ஒளிமிக் கோனே!
வருவீர் எம்மைத் தேற்றிடவே — (பிரேமை)

2. அல்லும் பகலும் காத்திட்டாய் — நீ
அனபாய் எம்மை நேசித்தாய்
அன்பே - அமுதே - அடியார் நாங்கள்
அடிபணிந்தோமே காத்தருள்வாய் — (பிரேமை)

3. பேதமைக் குணத்தால் தவறிடினும் — வீண்
சோதனை வாழ்வில் வந்திடினும்
ஏதும் வந்தெமை அணுக விடாது
பிரேமையால் எம்மைக் காத்திடுவீர் — (பிரேமை)

பாட்டு 4.

(காதலே காதலே — என்ற மெட்டு.)

தெய்வமே — அன்பின் சிகரமே
தெய்வமே

1. கொடுமை அற்ப வாழ்விலே
கடுமையான புயலிலே
சுகநல் வாழ்வு நடத்திட
எமக் கருள்வாயே — (தெய்)

2. வானகமும் தாரகையும் படைத்த தெய்வமே
வாழ்க்கை நடுவில் அதிசயத்தை அளித்த தெய்வமே
(தெய்)

3. கனவு போன்ற வாழ்விலே கஷ்டம் யாவும் நீங்கவே
இணையில்லாத உமது அன்பில் நீடுவாழவே
(தெய்)

பாட்டு 5.

(வண்ணமலர் தன்னைக் கண்டு — என்ற மெட்டு.)

வண்ணத் தாமரை தனிலே
வாழும் தேவி சரஸ்வதியே
திண்ணமுடன் காத்து உந்தன்
அன்பை ஈகுவாய் (வண்ண)

காவியம் வளர்ந்திட்ட நல்
தேவியே உனைக் கூப்பிடுேம்
மேவியே அடியார் நெஞ்சில்
தாவி அருள்வாய் (வண்ண)

கலைகள் அரசி நீயே
கலைமகளே கஞ்சம்
கலைபல தருவாய் நீ வருவாய்
தயவாய் அருள்வாய் (வண்ண)

பாட்டு 6.

(அமைதியில் லாதேன் மனமே—என்ற மெட்டு.)

அமைதியின் சிகரமே அன்பே — அதி அன்பே
அதி அற்புத தேவனே வரமே தருவாய்
மனமே பொங்க வாழ்த்தினேம் தினமும் (அமைதி)

இன்பமே இதயத்தின் ஒளியே — ஒளியே
இன்புறு வாழ்வினை எமக்களிப் பாயே
இதயமே பொங்க வாழ்த்தினேம் தினமும்
(இன்பமே)

1. ஆதியும் அந்தமும் இல்லா தேவா
அதிசய ரூபனே வரமீவாய்
ஆகா உனது அற்புத அன்பு
அளவிட எமக் கிய லாதே (அ

2, உயிர்வாழ் ஜீவனை உருவாக்கினீரே
உயர்ந்த நல் உத்தம குணத்தாலே
அதுபோல் இன்றும் ஆசீர்தந்து
ஆதரித் தருள் செய்வீரே (இன்பமே)

பாட்டு 7.

(இங்கு வாராயோ — என்ற மெட்டு.)

கூடித் துதிப் போமே
நல்ல மனதாய்த் தூய எண்ணத்தோடு நாம்
ஒன்ருய்க் கூடியே (கூடி)

சரணம்

1, பக்தியாகச் சேருவோம் பண்புடனே கூடுவோம்
நித்தம் துதி பாடுவோம் நிமலனை நாடுவோம்.
ஆனந்தமாய்ப் பாடியே கூடித்துதிப்போமே (கூடி)

2. தினம் கல்வி வளர்ந்திட நன்மை பல பெருகிட
நாட்டின் நன்மை உயர்ந்திட பாலர் ஒன்றாய் சேர்ந்து நாம்
ஆனந்தமாய்ப் பாடியே கூடித் துதிப்போமே (கூடி)

3. வளர்பிறை போல் நம்நிலை தினம் உயர்ந்திட
கலை பல வளர்ந்திட அன்பு மேவி உயர்ந்திட
ஆனந்தமாய்ப் பாடியே கூடித் துதிப்போமே (கூடி)

4. மாணவர் கூடியே மகிழ்வாகப் பாடியே
மாண்புடனே காத்திட நலம் சுகம் ஓங்கிட
அவர் பாதம் போற்றியே கூடித் துதிப்போமே (கூடி)

கல்வி.

பாட்டு 8.

(கல்லாதவன் துயரப்படல்.)

(கன்னியே மாமரித் தாயே—என்ற மெட்டு.)

கல்வியில்லாமல் கெட்டேனே
இரு கண்ணிருந்தும் குருடானேன்
இன்னல் பல அடைந்தேனே
பொன்னான வாழ்வை இழந்தேனே (கல்வி)

கற்றோர் சென்ற இடமெல்லாம்
உற்றே வாழ்வு கிட்டுதே!
ஏதுமில் லாதிவ் வாழ்வு
ஏதினி வேண்டாம் வீண் தாழ்வு (கல்வி)

சிறப்பு.

பாட்டு 9.

(ஓரிடந்தனிலே — என்ற மெட்டு.)

பூதலம் தனிலே—உயர் பண்பை நிலைநாட்டி
புகழ் ஓங்கிட சுகம் தந்திடும் புனிதமான கல்வி (பூத)

கற்றோர் சென்ற திசை பூராவும்
கனிவால் உயர்ந் திடுமே
அறம் ஓங்கிட அன்பு மேவிட திறமையான துணையே (பூ
யோசி! அகன்றிடுமே மடமை—அறியாமை
நாட்டில் தலையே நீட்டாது
நாட்டினை உயர்த்திடச் செய்யும் கலைகள் பலவும் வளர்க்கும்
மாபெரும் தீண்டாமை தன்னலம் அறிவின்மை
எல்லாமே நீக்கும் (பூத)

பள்ளிக்கு அனுப்புவீர்.

பாட்டு 10.

(ஓ ரசிக்கும் சீமானே —என்ற மெட்டு.)

ஓ அறிவுப் பெற்றோரே! பார் புகழும் பெரியோரே
களிப்புடன் அகமகிழ—தினம்
நினைக்க நினைக்க மனம் இனிமை தரும் விதத்தில்
அறிவுக் குவியல் பெறுவீர் (ஓ அறிவு)

1. கற்றிடாது கற்சிலையாய் வாழ்ந்தால்—பிறர்
கண்டு ஏளனம் புரிவர் வீணாய்—நம் நிலைமை
கண்டு ஏளனம் புரிவர் வீணாய்—பாலர்
கல்வி அறிவைத் தேடிட ஒப்புடன் முகமலர்ந்து
நல்மனதாய்ப் பள்ளி அனுப்பி—தினம்
நினைக்க நினைக்க மனம் இனிமை தரும் விதத்தில்
அறிவுக்குவியல் அளிப்பீர் (ஓ அறிவு)

2. குழந்தைகளே நாட்டின் செல்வம் பாரீர்—இன்ப
வாழ்க்கையை அமைப்பவர்கள் காணீர்—நாட்டின்
வாழ்க்கையை அமைக்கும் சிற்பி காணீர்—வீணில்
வாழ்வினைச் சிதைத்திடாது காலத்தை வீணாக்கிடாது
ஞானத்தைப் பெருக்குவீரே—தினம்
நினைக்க நினைக்க மனம் இனிமை தரும் விதத்தில்
அறிவுக்குவியல் அளிப்பீர் (ஓ அறிவு)

சுகாதாரம்.

பாட்டு 11.

(ஆரோக்கிய விதிகள்.)

(ரகுபதி ராகவ ராஜாராம் — என்ற மெட்டு.)

சுகமுடன் வாழ்வீர் பாலர்களே
சுகவாழ்வு யாவும் பெறுவீர்களே
சுந்தர மாக வாழ்ந்திடவே
சுக விதிகளை அநுசரிப்பீர்

காலையில் சேவல் கூவுமுன்னே
கதிரோன் உதயம் வருமுன்னே
காலைக் கடனை முடித்திடுவாய்
கருத்தாய்த் தினமும் எழுந்திடுவாய்

பசித்திட மென்று புசித்திடுவாய்
பல்லை நன்றாய்த் துலக்கிடுவாய்
மாலை நன்றாய் ஆடிடுவாய்
பல்லைக் கழுவு தூங்குமுன்னே

உடலை நன்றாய்த் தேய்த்துக்குளி
உண்மையாய் கிரந்தி அணுகிடாது
தண்ணீரில் தினமும் குளித்திடுவாய்
தலையை நன்றாய் வாரிவிடு

கைகால் யாவும் அலம்பிடுவாய்
கவனமாய் அசுத்தம் நீக்கிடுவாய்
நகக்கண் அழுக்கை எடுத்திடுவாய்
நஞ்சாய் அதனை மதித்திடுவாய்

ஆடையைத் தினமும் அழுக்குப்போக்கி
அழகாய் நாளும் உடுத்திடுவாய்
சுத்தக் காற்றை விரும்பிடுவாய்
சுகமுடன் உலகில் வாழ்ந்திடுவாய்

பாட்டு 12.

(ஆடுவோமே பள்ளு பாடுவோமே — என்ற மெட்டு.)

ஆடுவோமே விளை யாடுவோமே
ஆனந்தமாக உடல்வியர்க்க நாம் (ஆடு)

1. மாலை வேளையிலே ஆடுவோமே
மஞ்சள் வெயில் படவே ஓடுவோமே
திறந்த வெளிதனிலே ஆடுவோமே
சடுதியிலே உடல் திடமுறுமே (ஆடு)

2. உள்ள அசுத்தம் எல்லாம் வெளிப்படுமே
உடல் உறுதியினாலே மிக வனப்புறுமே
அயர்வோடு தூக்கம் மிக வருமே
அசதியாவு மிழந்து நலமிருமே (ஆடு)

நம் நாடு.

பாட்டு 13.

(எங்க நாடு — என்ற மெட்டு.)

எங்கள் நாடு—இது எங்கள் நாடு
மங்காப் புகழ் தங்கும் நாடு—வீரம்
பொங்கும் நாடு—வையம்
வியக்க நல்குறளைத் தந்த வள்ளுவன் நாடு (எங்)

சிலப்பதி காரத்தோடு
சிறந்த நன்னூலை சந்து தலை நிமிர்ந்த
தனிப் பெருமை தந்தது எங்கள் நாடு (இது எங்)

சேர சோழ பாண்டியர்கள்
வாழ்ந்த நாடு—இனிமை
தாய் மொழியில் காவியங்கள் தந்த நன்நாடு

ஔவை கம்பன் பாரதியைத் தந்த எம் நாடு
அழகு கவிதை அன்புக் குறளை
அள்ளி வீசி உயரும் நாடு (எங்க)

தீரன் சிதம்பரன் வீரக் குமரனும்
பிறந்த தென்னாடு
சிறந்த பொன்னாடு — நல்ல

நீதி தருமம் தழைத்து ஓங்கி
நிலைத்து நின்ற நாடு — இது
எங்க நாடு — மங்காப்
புகழ் தங்கும் நாடு (எங்க)

எல்லைகள்.

பாட்டு 14.

(அந்தி சாயிர நேரம் — என்ற மெட்டு.)

எங்கள் இந்திய நாடு
அதிற் கில்லை இணை ஈடு
சிந்து கங்கை யமுனை பாயும்
செழித்த நன்னாடு—சிற்பம்
நிறைந்த பொன்னாடு (எங்கள்)

வான மளாவும் இமய மலையும்
வடக்கே இருப்பதை அறிந்திடுவாய்—மிக
சாந்தி மயம் ஜோதி மயம்
ஞானிகள் வாழும் வெள்ளிமலை (எங்கள்)

அலைகளை வீசி அள்ளி இறைத்திடும்
அரபிக் கடலும் மேற்குண்டு
பார்த்திட நல் மனம் கவரும்
நேர்த்தி மிகுதுறை பலவுண்டு (எங்கள்)

தூரக் கிழக்கில் தொடர்ந்து சென்றிட
நேராய் வங்க கடலுண்டு
தென்றல் தரும் இன்பம் தரும்
இந்து சமுத்திரம் தெற்குண்டு (எங்கள்)

காந்தி அஞ்சலி.

பாட்டு 15.

(பூமாலை நீயே — என்ற மெட்டு.)

பாமாலை சூட்டி
பணிந்தோம் நின் பாதம்—பாரில்
அணிந்தோம் இம் மாலை (பாமாலை)

மறைந்தாயோ எம் மாதவத் தோனே—மகிதலம் ஏங்க
மன்னனும் நீயும்—ஓ, ஓ, ஓ
நாட்டிற்கு சேவை தந்து நன்மைகள் செய்தே
சீராக எமக்கு உழைப்பை நீ தந்தாய்—ராஜா
தீண்டாமை ஒழித்தாய் (பாமாலை)

சீமான் வீட்டில் நீ பிறந் திருந்தாலும்—சீர் தூக்கியே ஏழை
துயர் போக்கினாய்—ஓ, ஓ, ஓ
கோடான கோடி மாந்தர் கண்ணீர் மல்கிட
பூமானே இம்மை விட்டு மறைந்தாய்—ஏனோ
நீயும் மறைந்தாய் (பாமாலை)

பாட்டு 16.

(மந்திரி குமாரி—கடைசி பாட்டு மேட்டு.)

அன்புப் பணியாலே நீயே அஹிம்சையின் சின்னமாய்
நாட்டினர் நெஞ்சிலே
அன்புடனே மேவினாய்
காண்பவர் மகிழவே தேசத்தின் கீர்த்தியை
பரப்பிய நீயுமே மேன்மையுடன் நீங்கினாய்

1. அஹிம்சையில் ஆர்வம் கொண்டு ஆனந்த தீரமாய்
அறநெறி சத்தியம் கொண்டு எதிர்த்தனை வீரமாய்
தேசம் தன்னையே—பாதுகாக்கவே
அடிமை விலங்கினை அகற்றியே ஓட்டினாய் (அன்பு)

2. நாட்டுக்கே உயர்வைத்தரும் நேர்மை அசோகச் சின்னம்
நாளும் நின்புகழை உலகில் நாட்டிடும் தியாகக்கொடி
நானிலம் தன்னில்—நல்கி ஓங்கிட
நாளும் உன்சேவையை போற்றியே வாழ்த்தினோம் (அ

எங்கள் தாத்தா.

பாட்டு 17.

காந்தி எங்கள் தாத்தா
கதரைத் தந்த தாத்தா
சாந்த மூர்த்தி பாபு
சத்தியத்தின் வடிவு
நாட்டுக்காக உழைத்தார்
நன்மை பலவும் செய்தார்
சுதந்திரத்தை தந்தார்
சுகமாய் வாழச் செய்தார்

அன்பினாலே உழைத்தார்
அடிமைத் தளையை அறுத்தார்
இன்ப மான தாத்தா
இன்னல் நீக்கின தாத்தா

சாந்த மான வாழ்விலே
சோர்ந்தார் பலநாள் சிறையிலே
அஹிம்சை சத்திய நெறியாலே
அகற்றினார் அந்நிய கொடுங்கோலை

கத்தி கையில் எடுக்காமல்
யுத்தம் ஒன்றும் செய்யாமல்
சுதந்தரத்தை வாங்கித் தந்தார்
சுந்தரமான எங்கள் தாத்தா (காந்தி

உலகப் பெரியார்.

பாட்டு 18.

(ரகுபதி ராகவ ராஜாராம்—என்ற மெட்டு.)

1. கபில வஸ்துவில் பிறந்த கோமான்
சகல இன்பம் துறந்த பூமான்
துன்பம் நீக்கத் துறவி யானார்
பண்பில் சிறந்த அன்பு புத்தர்

2. அன்பின் உருவம் இயேசு நாதர்
துன்பம் கண்ட தியாக சீலர்
பாவம் நீக்கப் பாடு பட்டார்
பலரால் சிலுவையில் அறையுண்டார்

3. தேவன் ஒருவனே உண் டென்று
போதனை செய்து வழிகாட்டி
அறிவை வளர்த்தார் பாடுபட்டார்
அருமைத் தந்தை முகமதுவும்

4. ஆயுதம் இல்லாப் போர் செய்து
அஹிம்சை சத்தியம் நெறிகொண்டு
இந்திய விடுதலை தந்த பிதா
இணையில் லாநம் காந்தி பிதா

திருவள்ளுவர்.

பாட்டு 19.

(அன்னமிட்ட வீட்டிலே—என்ற மெட்டு.)

1. வள்ளுவப் பெரியார் நம் பெரியார்
தெள்ளமுதாம் நல் திருக்குறளை
அள்ளித் தமிழில் தந்தவராம்
அருமையான நம் பெரியார்

2. மைலாப் பூராம் பதிதனிலே
மைந்தனாய் ஆதி பகவானுக்கு
அருமை யாக அவதரித்தார்
அண்ணல் நமது வள்ளுவனார்

3. வானோர் புகழும் திருமறையை
வழங்கிய அறிஞன் வள்ளுவனும்
தேனும் கருத்தைத் தீந் தமிழில்
தந்த தெய்வத் தமிழ் மகனும்

4. அறம் பொருள் இன்பம் எனவகுத்து
அறிவாய் மக்களே உயர்ந்திடவே
அள்ளித் தந்தான் நல் கருத்தை
அனைவரும் உய்ய குறளடியால்

5. பாரோர் புகழப் பன்மொழியில்
பலரால் உருவாய் வந்ததே
இதனால் தமிழின் புகழெங்கும்
இனிமை நல் மணமாய்ப் பரவியதே (வ)

அசோகன்.

பாட்டு 20.

(கலை முதலாக — என்ற மெட்டு.)

1. மகத நாட்டினை மாண்புறச் செய்து
மாட்சியாய் ஆண்டான் அசோக ராஜன்
தாழ்ச்சியே இல்லா அசோக ராஜன்
வளம் பெற நாட்டினை நலம் செய்தான்

2. கலிங்க நாட்டினைக் கடும் போர் தொடுத்து
கதறிட உயிர் பல அழித்தான்
கலக்கியே மனது மயங்கி
ஞானம் பெருகிட உள்ளம் தெளிந்தான் ராஜன்

3. வாளினைத் தரையிலே எறிந்தான்
வன்மையாய் இம்சையை எதிர்த்தான்
ஆடு மாடு உயிர் ஜீவன்
எதையும் பலியிடாதே என்று சட்டம் செய்தான்

4. மக்களுடன் மாக்கள் வாழ
மருத்துவ வசதிகள் செய்தான்
பெரும் குற்றம் செய்வோரை அடக்க
கடும் தண்டனை விதித்தான் அமைதியை நாட்ட

5. தூண்கள் பலவும் நாட்டி
துயர்தனை நீக்குகல் கருத்து தீட்டி
உயர் உத்தம குணங்களை காட்டி
உதார குணத்தை வளர்த்தான் அசோகன்

6. அன்பு அன்பு என்றே உலகை
அனைத்தையும் வென்ற தியாகி புத்தன்
அருமை மதத்தைத் தழுவி
அறம்பல செய்து திறம்பட ஆண்டான் (மகத

மதுவின் தீமை.

பாட்டு 21.

(ஊசிப் பட்டாசே — என்ற மெட்டு.)

மனதை மயக்கி வெறியைக் கொடுக்கும்
மது வகையே இனி வேண்டாம் வேண்டாம்
நயத்தைக் கெடுக்கும் நஞ்சது ஊட்டும்
தீமை தரும் மது வேண்டாம் வேண்டாம்
நாம் அதை விலக்கி நயத்தையே தேடி
நலமே பெறுவோம் சபாஷ் சபாஷ்

அடடா இது மிக ஆபாசமாகும்
அறவே ஓட்டிடு வோமே

ஆ கா க அரக்கன் கொழுத்திப் போடுவோம்
ஆழக்குழியில் அழுத்திப் போடுவோம்

சீ அதைக் குடித்தால் மாறிடும் குணமும்
தூ தூ அவை தரும் தீமை தீமை

நீராகாரமும் இருக்கே அமுதாய்
நிதமும் குடிப்போம் பலே பலே

புது வாழ்வின்றே ஆகுமே வாழ்வில்
புதுமை இன்பம் ஆகும்

மடிந்தானே அரக்கன் வேரோடு மாய்ந்தான்
மகிழ்ந்திடுவோம் நாம் பூவாணம் விட்டு (மனதை)

செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்.

பாட்டு 22.

(புதுப் பெண்ணின் மனதை — என்ற மெட்டு.)

ஓ சிங்காரச் சின்னஞ்சிறு பாலர்களே
உங்க சிங்கார நடை நடந்து வாங்கோ
இளம் தென்றல்போல வந்து உதவிடவே
இந்த செஞ்சிலுவைச் சங்கத்திலே சேரீர் (ஓ சிங்)

தெருவைச் சுத்தம் செய்து தினம் சேவைசெய் அன்பாக
விரைந்து ஒன்றுகவே! அறிவீர் பாலர்களே
இன்பமாக அசுத்த மில்லாமலே
அழகான பணியாகுமே—நிலையான அறமாகுமே (ஓ)

ரஸ்தா வீதியைத் தினம் அன்பாக பரப்புவாய்
பழத்தோல் கண்ணாடி லாடம் யாவும் எடுத்துச்
சுத்தம் செய்வாய்
விபத்து ஒன்றும் நேராது வழிசெய்
இன்பப் பணியாகுமே—மனதில் மலர்ச்சியாய்
சேவை செய்வாய் (ஓ)

ஆதாரக் கல்வி.

பாட்டு 23.

(அமைதியில்லா தேன்மனமே — என்ற மெட்டு.)

கைத்தொழில் நமக் கவசியமே—அவசியமே
அனுதினம் நமக்கிது உழைப்பினை ஈந்து
மானிடர் வாழ்ந்திட ஊதியம் தந்திடும் (கைத்)

பருத்தியைப் பக்குவம் செய்வோம்—செய்வோம்
பஞ்சுடன் கொட்டையை மீணமூலம் பிரித்து
நாதம் எழும் வில்லால் நன்ருக வெட்டி (பருத்)

1. ஒய்வு நேரத்தை நாம் வீணாய்க் கழிக்காது
ஓயாது ராட்டையால் நூற்றிடுவோம்
சிட்டமாய் நூலைச் சேர்த்து நன்ருக
திண்ணமாய் நெய்திடுவோமே (கைத்)

2. சுயதேவையை நாம் பூர்த்தி செய்வோமே
ஆதாரக் கல்வியின் துணையாலே
அண்ணல் காந்தியின் உயர்ந்த நல் கல்வி
அவனியில் பரப்பி நாம் வளர்ப்போம் (பருத்)

கும்மி.

பாட்டு 24.

(பிருந்தாவனத்தில் — என்ற மெட்டு.)

1. தோழிகாள் ஆடி பாடிடுவோமே
நந்த வனத்தில் பூப்பறித்தே!
சிந்தை குளிரும் தென்றலில் சென்றே
சொந்த நாட்டினை நாம் நினைந்தே (தோழி)

2. அனைவரும் கூடி இறைவனைப் பாடி
நிதமும் இறைவனை நாம் மறவாது
பணிமிகச் செய்தே பக்தியாய்க் கூடி
அனுதினம் தேசம் நலமுற நாமே (தோழி)

3. மாநிலம் மெச்சிடும் மாநதி பலவும்
மாதவத் தோறும் சேவை செய்வோரும்
தேனினும் இனிய மலைவளம் உண்டு
மானிடர் யாவரும் மெச்சிடும் நாடு (தோழி)

4. பாவலர் நாவலர் வாழ்ந்த நன்னாடு
வீரமும் தீரமும் உடன்உறு நாடு
ரத்தம் சிந்த அஞ்சாத தீரர்
சித்தமும் கலங்கா வீரரின் நாட்டை (தோழி)

5. பாரத நாட்டின் பழம்புகழ் பாடி
பண்டைய நன்முறை பலபல பேணி
வேதம் பக்தி மிகமிக உயர
இறைவனைத் துதித்தே நாம் எல்லோரும் (தோழி)

நல்ல மாணவன்.

பாட்டு 25.

(நல்ல பெண்மணி — என்ற மெட்டு.)

* நல்ல மாணவன் மிக நல்ல மாணவன் — உயர்
கல்வி தந்த குருவின் சொற்படி
நடப்பவன் எவனோ அவனே (நல்ல)

அதி காலையிலே எழுந்து இறைவன்
பாதம் பணியணும் — பின்
மேனி குளித்து அழுக்கு நீங்க
துவைக்கணும் துவாலை

பள்ளிக்கூடம் செல்ல வேண்டும்
காலையும் மாலை — தினம்
கற்றுத் தந்த வாசகத்தை
கவனிப்போன் எவனோ அவனே (நல்ல)

தந்தை தாயை தெய்வமாக வணங்கி பணியணும்—தினம்
அன்பின் வார்த்தை மதித்து நடந்து இன்பம் பெறுகணும்
ஆசான் சொன்ன அறநெறியை அன்பாய் பேணணும்-மிக
அடக்கி ஒடுங்கி உணர்ந்து மதித்து
நடப்பவன் எவனோ அவனே (நல்ல)

ஒய்ந்த நேரம் அரட்டை அடித்து ஓயக்கூடாது—பிறரை
நிந்தனையாய் மனதில் கூட நினைக்கக் கூடாது
இகழ்ச்சியாக எவரையுமே எண்ணக் கூடாது—கடும்
வன்சொல் கூட இன் சொல்லாக
மதிப்பவன் எவனோ அவனே (நல்ல)

நாட்டு பெரியார் சரிதம் நன்றாய் அறியணும்—தினம்
நேரு, காந்தி, பாரதியை மனதில் வைக்கணும்
தெள்ளமுது போன்ற நமது குறளை படிக்கணும்—அதில்
கண்ட கருத்தை மனதில் ஊன்றி
உணர்பவன் எவனோ அவனே (நல்ல)

(* "நல்ல மாணவி" என்று பெண்களுக்காக மாற்றிப் பாடலாம். கும்மி, கோலாட்டங்களுக்கு உபயோகிக்க லாம்.)

அபிநயப் பாடல்.

பாட்டு 26.

ஜினுக்கு ஜினுக்கு ராணி
மினுக்கி மினுக்கி வந்தாள்
குலுக்கி குலுக்கி நடந்தாள்
அலுத்து வழுக்கி விழுந்தாள்

இரட்டை மாட்டு வண்டி
பட்டை போட்ட வண்டி
கிந்திக் கிந்தி ஏறினாள்
சொகு சாக ஏறினாள்

சாட்டை எடுத்தான் வண்டிக்காரன்
வீட்டை நோக்கி ஓட்டினான்
வேகமாய்ச் சென்றது முந்தி
குடு குடு கடகட வண்டி

பத்து.

பாட்டு 27.

ஒன்று இரண்டு லட்டு
மென்று தின்றான் கிட்டு
மூத்து கூடச் சேர்ந்து
ஒத்து தின்றான் பிட்டு
சின்னத் தம்பி வந்தான்
சீனி மிட்டாய் தந்தான்
கிட்டு மூத்து சேர்ந்து
பிட்டுத் தின்றனர் மூன்று
தங்கை கமலம் வந்தாள்
மாங்காய் நாலு தந்தாள்
நால்வர் தின்றனர் மென்று
ஆக மொத்தம் பத்து

நிறங்கள்.

பாட்டு 28.

மாலை நேரம் வெய்யிலில்
மஞ்சள் நிற வெய்யிலில்
சாலை ஓரம் நடந்தேன்
சிவப்பு மோட்டார் சென்றது
குளிர்ந்த நல்ல வேம்பு
பச்சை நிற வேம்பு
மேலே நீல வானம்
காட்சி பார்த்து நின்றேன்

பக்கத்து வயலில்
மேய்ந்த வெள்ளைப் பசுவில்
கருப்பு மையினை ஒன்று
கத்தின காட்சி கண்டேன்

காக்கை வீட்டில் விருந்து.

பாட்டு 29.

காக்கை வீட்டில் விருந்தாம்
காணப் பலவும் வந்தது
மியாங் மியாங் பூனை
மெல்ல பதுங்கி வந்தது
ளொள் ளொள் நாய்
அதைக் கண்டு எழுந்தே நின்றது
குவாக் குவாக் வாத்தும்
கூட மெதுவாய் சேர்ந்தது
கொக்கரக்கோ கொண்ட சேவல்
கிண்டி முந்தி வந்தது
எல்லாம் ஒன்ருய் சேர்ந்தது
ஜோராய் விருந்து உண்டது
வயிறு நிறைய சாப்பிட்டு
ஜாம் ஜாம் என்று நடந்தது

வண்ணாத்தி.

பாட்டு 30.

பையன்:- வண்ணாத்தி! வண்ணாத்தி!
வண்ணமான வண்ணாத்தி!
ரிங்கா இசை போட்டு
போவதெங்கே வண்ணாத்தி!

வண்ணாத்தி:- தம்பியே! தம்பியே!
தங்கமான தம்பியே!
வண்ணமான மலர் தனில்
தேனை எடுக்கப் பறக்கிறேன்

பையன்:- மலர்க்கு மலர் பறக்கிறாய்
மனம் மகிழத் தேன் குடிக்கிறாய்
திண்ணமாய் துன்பம் செய்யேன்
தேனை எனக்கும் தாராயோ? (வண்ணாத்தி

பட்டுப் பூச்சியின் கதை.

பாட்டு 31.

(எண்ணி எண்ணிப் பார்க்க — என்ற மெட்டு.)

எண்ணி எண்ணிப் பார்க்க மனம்
துன்பத்தால் வாடுதே
என் சரிதம் கேட்டால் நீயும்
துள்ளி மனம் வாடுவாய் (எண்ணி)

முசுக் கொட்டை செடியில் மகிழ்வாக வாழ்வேன்
மிக்க நல்ல உணவு எனக்கேற்ற அமுது—அது
எனக்கேற்ற அமுது (எ)

நாலைந்து தடவை நான் தோலுரித்து வளர்வேன்
சாம்பல் நிறத்தை விட்டு பொன்னுருவாய் வளர்வேன்
கண்ணயர்ந்து கூட்டிலே உறங்கிடும் வேளையில்
கள்வர் போல மானிடர் கூட்டி ஒன்ருய்ச் சேர்ப்பர் (எ)

புழுவான என்னிடம் உள்ள பிசின் கொண்டே
பக்குவமாய் நூற்று கூடு கட்டி வாழ்வேன்
இறக்கை முளைத்தே மிக ஆனந்தமாய் இருக்கையில்
இரக்க மில்லா மானிடர் வெறுப்புத் தோன்ற செய்வர் (எ)

அழகான பூச்சி என்னை கூண்டோடு வெந்நீரில்
போட்டு உயிர்தனை நீக்கி பட்டு நூலைச் சேர்க்கிருர்
இரக்கமில்லா மானிடர் துணிந்தே உயிரைக் குடிக்கிருர்
அழகுடனே பட்டாடை நெய்து ஜோராய் உடுத்துருர்
(எ)

கதைப் பாடல்.

பேராசையின் விளைவு.

பாட்டு 32.

(செந்தமிழ் நாடு — என்ற மெட்டு.)

1. அண்ணாமலை என்ற வியாபாரி ஒருவன்
கண்ணாடி வியாபாரம் செய்து வந்தான்
ஊர் ஊராக அலைந்து விற்றான்—நல்ல
ஊக்கமாய் லாபம் அடைந்து வந்தான்

2. எண்ணி எண்ணிப் பணம் சேர்த்து வைத்தான்
எண்ணம் இன்னும் பணம் சேர்க்கத் தூண்டியது
மனதில் கற்பனை ஊறியது
மதி மயங்கிப் பேசிட ஆரம்பித்தான்

3. தினம் தினம் பணம் சேர்ந்து விட்டால்
மனம் பொங்கிடத் தனவான் ஆகிடுவேன்
பணிவாய் நடக்க குணம் சொல்வேன்—நல்ல
துணியால் ஆடைகள் உடுத்திடுவேன்

4. மாடி வீடு கட்டி வாழ்ந்திடுவேன் அதில்
வாடாத பூந்தோட்டம் ஆக்கிடுவேன்
மோட்டார் காரில் சென்றிடுவேன்—தினம்
பகட்டாய் கை வீசி நடை போடுவேன்

5. தோட்ட வேலைக்காக ஐந்து பேரும்—நல்ல
வீட்டு வேலைக்காகப் பத்துப் பேரும்
கைகட்டி வாய் பொத்தி நிற்கச் செய்வேன்
சொன்ன சொல்படி நடக்க ஆணை செய்வேன்

6. யாரைக் கண்டாலும் பணிய மாட்டேன்—நல்ல
வியாபாரி சேட்டாக மாறிடுவேன்
பணியாதவரை மதிக்க மாட்டேன்—அவரை
காலால் சரியான உதை கொடுப்பேன்

7. என்று சொல்லி காலை வீசிவிட்டானவன்
கண்ணாடி பாத்திரக் கூடை நோக்கி
சுக்கல் நூறாக உடைந்ததுவே—மனம்
ஏங்கித் தவித்து வருந்தினனே (அண்ணாமலை)

பூனையும் பாற்கட்டியும்.

பாட்டு 33.

(தேனிமை யதிலும் — என்ற மெட்டு.)

1. பூனைகள் இரண்டும் புகுந்தொரு வீட்டில்
பாற் கட்டி திருடியதே
அதைப்பிரித்திட ஒற்றுமை பொறுமை இல்லாது
சண்டை போட்டதுவே

2. ஒற்றுமை இல்லா பூனைகள் இரண்டும்
குரங்கிடம் சென்றதுவே
தம் குறைகளைச் சொல்லி சமமாய்ப் பங்கிடவே
அப் பாற்கட்டி தந்ததுவே

3. தந்திரமாகக் குரங்காரும் தலையை
ஆட்டியே சம்மதித்து
பாற்கட்டியைப் பிரித்து கையிலே உருட்டி
எடைதனை பார்த்ததுவே

4. சிறிதும் பெரிதுமாய்ப் பிரிவினையாக்கி
முழுதும் எடுத்துப் புசித்ததுவே
பூனைகள் இரண்டும் தடுத்துப் பகைத்தே
ஏமாந்து திரும்பியதே (பூனைகள்)

குல்லா வியாபாரி.

பாட்டு 34.

(அந்தி சாயிற நேரம் — என்ற மெட்டு.)

1. குல்லா வியாபாரி ஒருவன்
குல்லாக்கள் விற்கச் சென்றான்
எல்லாம் மரத்தின் கீழ் வைத்து
அயர்ந்து தூங்கினான்
குல்லா வைத்து தூங்கினான்

2. எடுத்துத் தலையில் அவனைப் போல
ஒவ்வொன்றாக வைத்ததுவே
தாவினது — சாடினது
கிளைகள் மேலே ஓடினது

3. குல்லாக்காரன் விழித்துப் பார்த்தான்
குல்லா ஒன்றும் காணவில்லை
திடுக்கிட்டான் — பயந்திட்டான்
மேலே எட்டிப் பார்த்திட்டான்

4. தலையில் குல்லா வைத்துக் குரங்குகள்
கிளைகள் மேலே இருந்ததுவே
பார்த்திட்டான் — யோசித்தான்
பயன் தரும் வழிதனைச் சிந்தித்தான்

5. தலையில் உள்ள குல்லா எடுத்து
தரைதனை நோக்கி எறிந்திட்டான்
பார்த்ததுவே மனிதனைப் போல
குரங்கும் கீழே எறிந்ததுவே

6. சமயோசித புத்தியினாலே
சந்தோஷமாய் சேர்த்திட்டான்
மூட்டை கட்டி விற்பனைக்கு
முந்தி விரைவாய் நடந்திட்டான் (குல்லா)

ஆமையும் முயலும்.

பாட்டு 35.

(மானும் மயிலும் — என்ற மெட்டு.)

ஆமையும் முயலும் ஆனந்தமாக
அன்புடன் ஒன்றாய் இன்ப நன்னாளில்
பந்தயம் வைத்ததுவே—மைல்கல்லை
நோக்கியே விரைந்ததுவே

ஆர்வமாய் முயலும் தந்தியே சென்று
கர்வத்தால் மெதுவாய் அயர்ந்தது விரைவாய்
நினைக்க ஒண்ணாத ஆனந்தமாக
நித்திரையாலே நிம்மதி கண்டது ஆ, ஆ, ஆ (ஆ)

தங்க நடையாய் ஆமையும் மெதுவாய்
தயங்கியே மனது மயங்கியே சோர்வாய்
மைல்க் கல்லை நோக்கியதே பயத்தால்
மைல்க் கல்லை நாடியதே

அயர்ந்த நித்திரையில் இருக்கும் முயலை
ஆனந்தமாகக் கடந்தது திடமாய்
திடுக்கென விழித்து திகைத்தே முயலும்
ஆமை கெலித்திட வெட்கியே வாடிற்று (ஆ)

ஒற்றுமை கற்றனர்.

பாட்டு 36.

(ரிம்ஜிம் பரிசே — என்ற மெட்டு.)

1. மைந்தர் நால்வர் போரிட்டே
தந்தை மனதை வாட்டினரே
சிந்தை கலங்கியே சோகமுடன்
நொந்தே மனது வாடினரே

2. மக்களை நோக்கி அழைத்திட்டார்
கட்டு விறகைக் கொடுத்திட்டார்
ஒடித்தனர் மைந்தர் வீரமுடன்
மடத்தனம் அங்கே இயலவில்லை

3. தனித்தனியாகப் பிரித்திட்டால்
ஓடியுமே விரைவினில் எனக்கூற
ஒடித்தனர் மைந்தர் நால்வருமே
முடித்தனர் விரைவில் எளிதாக

4. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
என்றே உரைத்தார் தந்தையும்
நன்று நன்று எனத் தெரிந்தே
நன்மையுறவே வாழ்ந்திட்டார்

வேடனும் புருவும்.

பாட்டு 37.

(அழலேறும் ஜீவிதம்—என்ற மெட்டு.)

ஒருநாள் ஒரு வேடன் வில்லை எடுத்தான்
வேட்டையாடவே புருக்கள் மீது
வைத்தான் குறிதனை ஆவலாகவே (ஒ)

அந்த நேரம் எறும்பொன்று வேடன் காலிலே
வந்தே பலமாய்க் கடித்ததே
நலத்தை நாடியே செய்நன்றி மறவாது (ஒ)

திடுக்கிட்டான் வேடன் வில்லைப் போட்டு நின்றான்
தரைதனில் மிகச் சப்தமாகவே (ஒ)

சப்தம் கேட்ட புருக்களும் தப்பிற்றே விரைவாய்
நொந்த மனதாய் வேடனும் வீடு நோக்கினான் (ஒ)

குரங்கும் முதலையும்.

பாட்டு 38.

(பஜனை செய் மனமே — என்ற மெட்டு.)

1. ஏரி ஒன்றில் பெரு முதலை வாழ்ந்தது ஓ, ஓ, ஓ
சேர்ந்து ஒன்றாய் குரங்குடனே வாழ்ந்தது
நிதமதனுடன் குரங்கு நட்பானதே—அன்பாகவே
நல் நாவற் பழம் தந்ததே

2. நா ஊறும் கனிகளைத் தின்ற—முதலை
நாள் தோறும் மனைவிக்கு கொடுக்கும்—அதன்
ருசிதனை நினைத்து மிகக் களிப்புடனே
அதன் ஈரலைக் கேட்டது ஓ, ஓ, ஓ

3. உள்ளத்தில் எண்ணத்தை மறைத்து "நண்பா"
உதவியை ஒருக்காலும் மறவேன்—நீயும்
விருந்துக்கு வருவாயே என்றழைத்து
முதுகில் ஏற்றியே சென்றது ஓ, ஓ, ஓ

4. நடு ஆற்றை கடக்கையில் முதலை—தனது
மோச எண்ண மதைக் கூற—ஒன்றும்
அஞ்சாது திடமாக குரங்காருமே
ஈரல் மரத்திலிருப்பதாய்க் கூறிற்று ஓ, ஓ, ஓ

5. வானரத்தின் வார்த்தையை நம்பி—முதலை
மனம் பொங்கி கரைதனைச் சேர—குரங்கு
ஆனந்த மாகவே தப்பித்தது
அதனை ஏமாற்றிய மகிழ்வாய் ஓ, ஓ, ஓ

6. உடம்பை விட்டு ஈரல் நீங்கின்—உயிரும்
உறுதியாய் நீங்கியே போகும்—மிகு
மூடனே உணர்ந்திடு (வாயே) எனக்கூற, முதலை
வெட்கமாய்த் திரும்பிற்று ஓ, ஓ, ஓ

★

பேராசையுள்ள நாய்.

பாட்டு 39.

(அக்கியாமிலாக்கே — என்ற மெட்டு.)

பேராசை மிகுநாயும் இரைதேடி நொந்து
ஊரெல்லாம் அலைந்தது ஓ, ஓ

சுற்றி அலையும் போது மாமிசத் துண்டைக் கண்டு
ஓடியே கௌவிமிக ஆவலாய்ப் பற்றியது

ஓடையைக் கடந்திடவே பாலத்தின்மேல் விரைந்ததுவே
ஓடும் நீரினைக் கண்டு உள்ளே எட்டிப் பார்த்தது

உள்ளே ஒரு நாய் வாயில் மாமிச துண்டைக் கௌவி
நேராய் உருவத்தையே பார்த்து ஏமாந்ததுவே

நாக்கில் ஜலம் ஊறிட ஆசை மிக்க விரைவில் தோன்ற
சீறிப்பாய்ந்தது நீரின் உள்ளே உள்ள கறி தின்ன

நீரினுள் பாய்ந்ததுமே வாயிலுள்ள மாமிசமும்
அந்த ஜலத்தினல் அடித்துப் போக ஏமாந்தது

காகமும் குடமும்.

பாட்டு 40.

(ஆசைக் கிளியே — என்ற மெட்டு.)

காகம் ஒன்று தாகத்தாலே
பறந்தது அலைந்தது
குடம் ஒன்றைக் கண்டு ஆவலாக
வந்தது உள்ளே பார்த்தது
நீரும் கீழே இருந்ததினாலே
குடிக்க வழியில்லை தவித்தது
நன்றாய்ப் பார்த்து நல்
யோசனை மனதில் உதித்தது
குடத்தில் கல்லை எடுத்து மிக
திடத்துடனே காகம் போட்டதுவே
ஒவ்வொன்றாய்ப் போட்டதுமே
தண்ணீர் மேலே உயர்ந்தது
குறுகுறுப்பாகத் தண்ணீர் மேலே
ஜிலு ஜிலுப்பாக உயர்ந்தது
மகிழ்வாக காகம் தாகம் தீர்த்து நேராய்ப் பறந்தது

பூகோளம்.

சஹாரா பாலைவனம்.

பாட்டு 41.

(சம்சாரம் — என்ற மெட்டு.)

வாழ்வே — எங்கள் — வாழ்வே
வான மாரியில்லா வரட்சி நிறைந்த பாலை-வன-வாழ்

1. பகலில் வெயில் அதிகம்
இரவில் குளிர் அதிகம்
உணவுப் பயிர்கள் செய்ய
இடமேது மில்லா பாலை வன வாழ்வே

2. பேரீச்சம் பழம் தின்று
பருத்தி உடை அணிந்து
ஊர் ஊராய் ஆடுமேய்க்கும்
உமரரே என்றன நாமம் வன வாழ்வே

3. பார்க்க அழகாய்த் தோன்றும்
டுவார்க் கென்னும் ஜாதி
பட்டப்பகலில் சென்று
கொள்ளை அடித்து வாழும் வன வாழ்வே

(by J. S. மோஸஸ் பாலையா)

நீக்ரோ.

பாட்டு 42.

(ஊசிப் பட்டாசு — என்ற மெட்டு.)

ஆப்பிரிக்காவின் பாலைவனத்தில்
வாழும் நீக்ரோ நானே, நானே
அகன்ற முகமும் சப்பை மூக்கும்
தடித்த உதடும் சேகாஸ் நானே
வளைந்த குச்சும் புற்களினாலும்
அமைந்த எங்கள் வீட்டில்

வெளிச்ச மிராது சன்னல்களில்லை
வீர்ரென்று வீசும் தென்றலுமில்லை

ஆடு மாடுகள் மேய்த்து வருவது
அடியேன் எந்தன் வேலை வேலை

காடு திருத்தி நாடுசெழிக்க
கழனி வேலை செய்து செய்து

வயல்களில் விளையும் வாழைப் பழத்தை
வயிறு புடைக்கத் தின்போம்

ஒட்டைச் சிவிங்கி யானை புலிகளை
வில்லம்பினாலே வேட்டையாடியே

(by J. S. மோஸஸ் பாலையா)

எஸ்கிமோக்கள்.

பாட்டு 43.

(மனுஷனை மனுஷன் — என்ற மெட்டு.)

1. குளிர்மிகு பனியில் சேர்ந்து வசிப்போர்
எஸ்கிமோக்கள்—அங்கே
மரம் செடி கொடி வளரா, பனிப் பாலைவனம்
தூந்திரமாகும் அது (குளிர்)

2. வட்டமான முகம் தட்டையான மூக்கு
மஞ்சள் நிறம்—மிகவும்
எஸ்கிமோக்கள்—ஆமா

3. "இக்லு" என்ற பனி வீட்டில் வசிப்போர்
குளிரான காலம்—தோலால்
செய்த கூண்டு உபயோக மானது
கோடைகாலம்—ஆமா

4. வெள்ளைக் கரடி, திமிங்கலம், ஸீலை
வேட்டையாடி—பச்சை
மாமிசம் இறைச்சி மென்று தின்பான்
மகிழ்ச்சியோடு—ஆமா

5. "ஸ்லெட்ஜ்" என்ற சக்கரமில்லா
வண்டி ஏறி—அதில்
நாய்களைப் பூட்டி வேட்டையாடுவர்
எஸ்கிமோக்கள்—ஆமா

6. படகுகள் ஈட்டி ஆயுதமெல்லாம்
எலும்பால் ஆனவை—அந்த
எரியும் விளக்கு மீன் கொழுப்பால் ஆனது
புரிஞ்சுக்கோ —நீ —ஆம் (குளிர்)

செல்விந்தியர்.

பாட்டு 44.

(ஓ சாமி ஐயா சாமி —என்ற மெட்டு.)

ஓ தம்பி ஐயா தம்பி
அன்பான தம்பி
ஐயா சொந்த வாழ்வை கொஞ்சம் கேட்டுப் பாருமய்யா

ஐயா தம்பி
அன்பான தம்பி
ஆட்டன் என்பார் — என் பேருங்க

ஐயா தம்பி
ஓ சின்னத் தம்பி
காடுகளின் நடுவிலேதான் என் குடிசை (ஐ)

பைசான் மாட்டுத்தோலால் ஆனமிக நல் குடிசை
பகட்டு வர்ணம் தீட்டி
கவர்ச்சி கரமா யாக்கி
நூந்திரக் காட்டில் வசிப்போம் செவ்விந்தியர் (ஐ)

வட்டமான கொம்பால்
செய்த ஆயுதம் தாங்கி
காட்டெருமை கிளை மானை வேட்டையாடி
மாமிசம் உணவாக்கி
தோலை உடையாக்கி
சிறகினாலே சிங்காரிப்பேன் (ஐ)

கானோ என்ற படகு
ஏறி மீன் பிடிப்போம்
தேனைப் உணவை அன்னை சமைத்திடுவாள்
நீர் செருப்பை அணிந்து
பனித்தரையில் நடப்போம்
சொந்த நாடு வட அமெரிக்கா தேசமாகும் (ஐ)

காஷ்மீரம்.

பாட்டு 45.

(ஆசையுள்ள மீசைக்கார — என்ற மெட்டு.)

காக்ஷி மிகுந்த நல்ல
மாட்சி மிகு நாடுண்டு—அங்கே
சிங்காரமே தானுண்டு

காஷ்மீரப் பிரதேசமாம்
அதன் பெய ராகுமே—ஓ
நிஜந்தா னுங்க—அழியா
எழில் பாருங்க

மலர்க் காடுங்க யாரும்
ஆசையோடு பார்க்கும் மிகு
காட்சிதான் மிக ஜோராமையா
தலைநகர் ஸ்ரீநகர்

எங்கள் மன்னர் இருப்பிடம் ஜீலம்
நதியும் செல்லும் இவ்விடம்
பழங்கள் பலவும் விளையும்
மங்காப் புகழ் நாடுங்க

ஏரிகளில் மிதக்கும் நல்ல
தெப்பவீடும் பல உண்டு—யாரும்
கண்டு ஆச்சரியப்படும்
நகரும் வீடும் பலவுண்டு—மலை

சாரல் மிக அழகுங்க—ஆட்டு
மந்தை வளர் நாடுங்க
அழகான இடமையா—ஆமாம்
கொஞ்சம் கேளய்யா

பனி ஆறு அங்கே ஓடும்
நீர் வீழ்ச்சி பல உண்டு
ஸிகர் ஸ்விட்ஸர் லாந்து தானுங்க
மிக மங்காக் காட்சி பாருங்க
குளிராய் இருப்பதாலே
ஆடை கம்பிளி தானுங்க (கா)

பல்லாரி இடையன்.

பாட்டு 46.

(கலைமுதலாக — என்ற மெட்டு.)

மழை வளம் இல்லா பல்லாரி நாட்டில்
மலை சூழ்ந்திருக்கும் சுற்றிலுமாய்
ஜனங்கள் குடிசையில் வாழ்வர்
அதிக ஆடைகள் நீக்கியே வாழ்வர் (ம)

ஆழக் கிணற்றில் ஜலத்தை அள்ளி
இறைத்தே பயிர் இடுவர் பருத்தி
ஆடு மாடுகள் மேய்த்தே மலை
மேடு பூராவும் அலைந்தே திரிவர் (ம)

ரோமம் அடர்ந்த நல் ஆட்டில் கம்பிளி
ஆடைகள் பலவும் செய்வர்
நாற்பதும் பெண்கள் தானே!! பாலர்
பள்ளி சென்றே தினம் பாடம் படிப்பர் (ம)

வாழ்த்துப் பாடல்.

பாட்டு 47.

(வாழிய நீடூழி — என்ற மெட்டு.)

பல்லவி

வாழிய நீடூழி — மெய்
வாழிய நீடூழி
வளர் பிறை போல் திருச்சபை நீடு — சதா
மனோகரமாய் மெய்
வாழிய நீடூழி (வா

அனு பல்லவி

தேவன் நாமம் மகிமைப் படவே
அன்பாக நாம் ஆனந்த மாக
இன்ப தேவன் போதனை நினைந்து
இதயமதில் கலந்தே (சதா மனோகரமாய்

சரணம்

1. அழியா வரத்துடனே வெண்மதி போல்
* கவுன்சில் வாழ்கவே வளர்கவே

* லெஸ்லி நியூபிகின் நீடு வாழ்கவே
* கனம் குருமார் சுபகரமாய்
சீரும் சிறப்பும் நலமே ஓங்கி
நாதன் அருளாலே (மெய் வாழிய)

2. இதயமதில் நாம் நினைந்தே தினம்
போற்றியே வாழ்த்திடுவோம்
இயல்போடு ஜூபிலி தினம் என்னாளும்
மகிழ்வோடு புவி தனில் (சதா மனோகரமாய்

* (குறிப்பிட்ட இடங்களில் மாற்றங்கள் செய்து சேர்த்துப் படிக்கலாம்.)

வாழ்த்துப் பாடல்.

பாட்டு 48.

(ஆஜா, ஆஜா — என்ற மெட்டு.)

வாழ்க வாழ்க வாழ்க நீடூழி
வாழ்க ஜோதியாய் என்றுமே
வாழ்கவே அதி மேன்மையாய்
புவி மீதிலே அழியாப் புகழாய் (வாழ்க)

உத்தம குணமான மானேஜர் வாழ்கவே
உயர் கல்வி ஓங்கவே

ஆனந்தமாக ஜோபிதமாக மங்களமாய் வாழ்க
அன்பு மலர் சொரிந்தோம்
பணிந்தோம் மாணவர்கள் (வாழ்க)

* சி. எஸ். ஐ. பாடசாலை புகழோடு வாழ்கவே
சீர் ஓங்கி வாழ்கவே

இகபர சுகத்தில் இன்பம் தந்திரம்
இறைவனைப் போற்றுவோம்
அவர் திருவடி போற்றுவோம்
அன்பாய் வாழ்த்துவோம் (வாழ்க)

* (பாடசாலையின் பெயரைத் தகுந்தாற்போல மாற்றிப் படிக்கலாம்.)

கொடி.

பாட்டு 49.

(நமது ஜென்ம பூமி — என்ற மெட்டு.)

கொடி யிதனைப் பாரீர்!
கொடி யிதனைப் பாரீர்!
கொடி யிதனைப் பாரீர்!

உடலும் உயிரும் தந்த மக்கள்
உழைப்பில் வளர்ந்த கொடியிது
கடமை மறவா வீரர் தந்த (கொடி)

சத்தியத்தைக் கைபிடித்து
நித்தியம் நெறி தவரா
பக்தியான எமது நாட்டின் (கொடி)

சுதந்திரத்தை வாங்கித் தந்த
சுதந்திரக் கொடியிது
அடிமை வாழ்வைத் தகர்த்தெரிந்த (கொடி)

அன்பு அஹிம்சை சத்தியத்தை
இன்பமாக வளர்த்திடும்
இன்னல் போக்கும் இனிமை சேர்க்கும்
(கொடி)

வீட்டிற்குப் போகும் போது.

பாட்டு 50.

(எண்ணி எண்ணிப் பார்க்க மனம் — என்ற மெட்டு.)

அகவிருள் நீக்கி அறிவொளி வீசிட
அடியார் புறப்பட
ஆசீர்வரம் தா வா (2 தடவை

பூமியில் நாங்கள் புகழுடன் வாழ
புனிதனே துணையாக
இருப்பீர் என்னாளுமே 2 தடவை (அ)

பகலெல்லாம் நாங்கள் கருத்துடன் பயின்று
இன்பமுடன் இனி நாங்கள்
ஆனந்தமாய்ச் செல்லுவோம்
ஆனந்தமாய்ச் செல்லுவோம் (அ)

கண்ணிரண்டும் ஒன்றாகக் காப்பது போலுமே
கருத்துடன் பாடசாலை காண்பாம் என்னாளுமே (அ)

புகழ் புகழ் ஆரம்ப பள்ளியில் பயின்று
புகழுடன் எங்களைப்
புனிதமாய்க் காத்த 2 தடவை

என்றென்றும் நாங்கள் ஒளியாக வீசிட
அன்றன்றும் எங்களை ஆசீர்வதித்தாளுமே (அ)

(முற்றும்.)

ஆனந்தா அச்சகம், விருதுநகர்.—1953.

எமது சோல் ஏஜெண்டுகள்:

A. S. மில்னர் & கோ.,
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

T. தம்பித்துரை,
நியூஸ் ஏஜெண்டு,
யாழ்ப்பாணம்.

தென்றல் நூற் பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம்.
சேலம் மாவட்டம்.

ஆழ்வார் நியூஸ் மார்ட்
புத்தக விற்பனையாளர்,
திருநெல்வேலி ஜங்.
பாளையங்கோட்டை.

கலைமகள் கம்பெனி,
திருநெல்வேலி ஜங்.

A. N. P. சிவன்,
திருவேங்கிடம்.

ராஜா பதிப்பகம்,
இராஜபாளையம்.

J. S. M. பாலையா,
C. S. I. பள்ளி,
விருதுநகர்.

பால் ஆசீர்,
சிப்பிபாறை.

சாத்தூர் டிரேடிங் கம்பெனி, சிவகாசி.

செல்லத்துரை,
C. M. S. காம்பவுண்டு,
சிவகாசி.

தங்கமுத்து,
பேஸிக் செக்கரட்டரி,
T. கல்லுப்பட்டி.

சின்னச்சாமி பிள்ளை,
புக் ஷாப்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

எமது அடுத்த வெளியீடு!

தோழர்: எம். கே. தாயப்பன்

தீட்டிய

"ஒரு நாள் இரவு"

ஒப்பற்ற காதல் நவீனம்

★ அழகிய வண்ண முகப்பு! ★

அணு 0-8-0 தான்!

விபரங்களுக்கு:

சாந்தா நிலையம்

திருத்தங்கல். (Via) சிவகாசி.

மேல் அட்டை மட்டும்: ராஜா லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி.